**நில அளவைச் சபை - 2020**
---------------------------------------------

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

நில அளவைச் சபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று 31 திசெம்பர் 2020 அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று, நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் பொழிப்பாக்கிய முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும். 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்குநச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பவற்றை உண்மையாகவும் நியாயமாகவும் காட்டும் வகையில் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளது என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கூட்டுத்தாபனத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது சபையை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் சபை தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, நிருவாகம் தொடர்புபட்ட தரப்பினர்களினால் வகிக்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் அவசியமானதாகும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக தாக்கம் ஏற்படுத்தலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிலையத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாக மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிலையத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிறுவனத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக

அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிலையத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கல்களுக்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நிலையம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்,

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| காசுப் பாய்ச்சல் கூற்றின் பிரகாரம் முதலீட்டுச் செயற்பாடுகளில் நிலையான வைப்புக்களாக ரூபா 1,789,992 காட்டப்பட்டிருந்தும் அந்த முதலீடுகள் சம்பந்தமாக வங்கியினால் வழங்கப்பட்டிருந்த வங்கி உறுதிப்படுத்தல் கடிதத்தின் பிரகாரம் அந்த மதீ ரூபா 1,538,872 ஆகும். அதற்கிணங்க ரூபா 251,120 | நிலையான வைப்பு மீதி 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 9,362,816.48 மற்றும் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 11,152,808.93* ஆகும். அதற்கிணங்க வித்தியாசம் ரூபா | காணப்படுகின்ற வித்தியாசத்தை இணங்கண்டு சரி செய்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| தொகையான விளக்கமளிக்கப்படாத வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. | 1,789,992 ஆக இருந்ததுடன் அது காசுப் பாய்ச்சல் கூற்றில் முதலீட்டு செயற்பாடாகக் காட்டப்பட்டது.<br><br>* 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு முதலீடாக வங்கியின் மூலம் உறுதிப்படுத்தி அனுப்பப்பட்ட வங்கி கூற்றுடன் ஒப்பீடு செய்யப்பட்டது. | |

**1.5.2 கணக்காய்விற்கான எழுத்து மூலச் சான்றுகள் இல்லாமை**

| விடயம் | தொகை | வழங்கப்படாத கணக்காய்வுச் சான்று | முகாமைத்துவத்தின் கருத்துரை | சிபார்சுகள் |
|---|---|---|---|---|
| நில அளவையாளர் உத்தரவுப் பதிதிரங்களை புதுப்பித்தல் | 4,782,200 | நேரடியாக வங்கக்குச் செலவு வைக்கப்பட்ட இப் பணம் தேவையான ஒப்பீடுகள் செய்து வருமானத்திற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்காது நடைமுறைப் பொறுப்பின் கீழ் காட்டப்பட்டிருந்ததுடன் அது தொடர்பான விபரமான பட்டோலை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | நேரடியாக அனுப்பி வைக்கப்பட்ட கட்டணங்கள் உறுதிப் படுத்தப்பட்டதன் பின்னர் உத்தரவுப் பத்திரம் வழங்கப்படுவதுடன் வழங்கப்படுகின்ற நிதியினை அடிப்படையாகக் கொண்டு மாதாந்தம் இணங்காணப்படும் வரை முற்பணக் கணக்கில் நிறுத்தி வைக்கப்படுகின்றது 2021 உத்தரவுப் பத்திரங்கைள வழங்குதல் மற்றும் 2021 மார்ச் 31 இல் வர்த்தமானியில் வெளியிடும் நடவடிக்கை இடம் பெறுவதானால் மூல ஆவணங்களை கணக்காய்விற்கு ஒப்படைக்க முடியாதிருந்தது. | உரிய கொடுக்கல் வாங்லை உறுதிப்படுத்துவதற்காக காணப்படுகின்ற மூல மற்றும் துணை ஆவணங்களை கணக்காய்வு நடவடிக்கைகளுக்காகச் சமர்ப்பித்தல் வேண்டும். |

**1.6 சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மைகள்**

---

சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் முதலியவற்றுடனானஇணக்கமின்மைச் சற்தர்ப்பங்கள் கீழே குறிப்பிடப்பட்டவாறாகும்.

| சட்டங்கள், விதிகள் பிரமாணங்களுக்கான தொடர்பு | இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள். |
|---|---|---|---|
| (அ) 2002 இன் 17 ஆம் இலக்க நில அளவை அதிகாரச் சட்டம்<br>(1) 38(இ) பிரிவு | 2019 சனவரி 03 ஆந் திகதிய 239 ஆவது சபைக் கூட்டத்தின் போது தீர்மானிக்கப்பட்டவாறு தேவையான ஆட்சேர்ப்பு நடைமுறை முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அங்கீகரித்து சபையின் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக நிரந்தர பதவியணியினரைச் சேர்த்துக்கொள்வதற்கு முடியாதிருந்தது. | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் அங்கீகரிக்கப்பட்ட இரண்டு முகாமைத்துவ உதவியாளர் நியமனங்களைப் பெற்றுக் கொள்வதற்காக உரிய ஆட்சேர்ப்பு நடைமுறைகளைத் தயாரித்து 2021 ஏப்ரல் 08 ஆந் திகதி மூன்றாவது தடவையாக காணி அமைச்சிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. உரிய சிபார்சுகள் பெற்றுக்கொள்ளப்பட்டதன் பின்னர் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்தினை பெற்றுக்கொண்டு நிர்ணயிக்கப்பட்ட முறைமைக்கு தேவையான பரீட்சைகளை நடாத்தி ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். அதுவரை நில அளவைச் சபையின் கூட்டங்களின் போது அங்கீகரிக்கப்பட்டவாறு ஒப்பந்த அடிப்படையில் சேர்த்துக்கொள்ளப்பட்ட உத்தியோகத்தர்களினால் கடமைகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | சபையின் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக உத்தியோகத்தர்களைச் சேர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (2) 38(ஊ) ஆம் பிரிவு | சபைக்கு தேவைப்படுகின்ற வகையில் பதவியணியினர் | திணைக்களத்தில் காணப்படுகின்ற விளையாட்டு வசதிகளை மேம்படுத்துவதற்கு 2020 | உத்தேச நலன்புரி மற்றும் சமூக பாதுகாப்புத் திட்டத்திற்காக நில |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | நியமிபக்கப்பட்டிருந்தும் சொந்த உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களுக்காக சமூக பாதுகாப்புத் திட்டத்தினை தோற்றுவித்தல் மற்றும் நலன்புரி, விளையாட்டு வசதிகளை வழங்குவதற்காக சபைக்கு இருந்த அதிகாரத்தின் பிரகாரம் 2020 மே 22 ஆந் திகதி 226 ஆம் இலக்க மற்றும் 2020 திசெம்பர் 23 ஆந் திகதிய 278 ஆம் இலக்க கூட்டங்களின் போது பணிப்பாளர்கள் சபையினால் தீர்மானிக்கப்பட்டிருந்தமை கணக்காய்வின் போது சச்சரவுத் தன்மையான விடயமாக இருந்தது. | திசெம்பர் 23 ஆந் திகதிய 278 ஆம் இலக்க மாநாடு கூட்டத்தின் போது எடுத்த தீர்மானத்தின் அடிப்படையில் நில அளவையாளர் நாயகத்திற்கு வேண்டுதல் விடுவிக்கப்பட்டிருந்த போதிலும் நிலம் சபைக்குச் சொந்தமில்லாததனால் சபையின் பணத்தைப் பயன்படுத்துவது தொடர்பாக சிக்கல் காணப்பட்டது. காப்புறுதிக்காக அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தும் முழுமையாக அரசுக்கு சொந்தமற்ற நிறுவனங்களின் உத்தியோகத்தர்கள் காப்புறுதி செய்யப்படுவதில்லை. NITF நிறுவனம் கூறியதனால் மற்றுமொரு நிறுவனத்தில் காப்புறுதி செய்வதற்குள்ள இயலுமை தொடர்பாக கலந்துரையாடாத தீர்மானம் எடுப்பதற்கு 2021 மே 07 ஆந் திகதிய 285 ஆம் இலக்க கூட்டத்தின் போது தீர்மானிக்கப்பட்டது. | அளவை சபையின் அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். |
| (3) | 43 (1) ஆம் பிரிவு | (i) | ஒவ்வொரு ஆண்டு மார்ச் 31 ஆந் திகதி அல்லது அத்திகதிக்கு முன்னர் சபையினால் அனைத்து பதிவு செய்த உத்தரவுப் பத்திரம் பெற்ற நில அளவையாளர்களின் பெயர்ப்பட்டியலை வர்த்தமானியில் வெளியிட வேண்டிய போதிலும் 2020 ஆம் ஆண்டில் பதிவு செய்த உத்தரவுப் பத்திரம் பெற்ற நில அளவையாளர்கள் 1320 நபர்களில் 2020 யூன் 26 ஆந் திகதி 2182 ஆம் இலக்க வர்த்தமானியில் வெயளியிடப்பட்டது. 925 | பதிவு செய்த உத்தரவுப் பத்திரம் பெற்ற நில அளவையாளர்களின் பெயர்ப் பட்டியலை வர்த்தமானியில் வெளியிடுவதற்காக 2020 பெப்ரவரி 28 ஆந் திகதியளவில் உத்தரவுப் பத்திரம் வழங்கப்பட்ட நில அளவையாளர்களின் எண்ணிக்கை 925 ஆகும். 2020 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் 2020 ஆம் ஆண்டிற்காக 1320 வருடாந்த நில அளவை உத்தரவுப் பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன. முழுமையான பெயர்ப்பட்டியலானது | அனைத்து உத்தரவுப் பத்திரம் பெற்ற நில அளவையாளர்களின் பெயர்ப் பட்டியல் வர்த்தமானியின் மூலம் வெளியிடப்படுதல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | நபர்களின் பெயர்கள் மாத்திரமாகும். | www.landsurveycouncil.org என்ற இணைய தளத்திலும் வெளியிடப்பட்டுள்ளது. ஒவ்வொரு ஆண்டும் பின்பற்றப்படுகிள்ற நடைமுறை இதுவாக உள்ளதுடன் வர்த்த மானியில் வெளியிடப்பட்டதன் பின்னர் வழங்கப்படுகின்ற வருடாந்த நில அளவை உத்தரவுப் பத்திரங்களின் பெயர்களுக்ககாக இணைய தளத்தை பார்க்குமாறு வர்த்தக மானியில் குறிப்பு இடப்பட்டுள்ளது. | |
| | (ii) | செயற்திட்டத்தில் ஈடுபடுகின்ற வருடாந்த உத்தரவுப் பத்திரத்தை இரத்துச் செய்கின்ற அல்லது நிறுத்தி வைக்கின்ற திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் அது தொடர்பாக தெரியப்படுத்தி வர்த்தமானியில் அறிவித்தல் வெளியிடப்பட வேண்டிய போதிலும் 2020 ஆம் ஆண்டில் உத்தரவுப் பத்திரம் நிறுத்தி வைக்கப்பட்ட ஒரு நில அளவையாளர் இருந்ததுடன் நிறுத்தி வைத்த திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் அது தொடர்பாக தெரியப்படுத்தி வர்த்தமானி வெளியிடப்படவில்லை. | 2020 வருடாந்த உத்தரவுப் பத்திரத்தினை நிறுத்தி வைத்த போது அல்லது இரத்துச் செய்த போது வர்த்தமானியில் வெளியிடப்படுவதற்கு தற்பொழுது நடவடிக்கை எடுக்கப்பட்டு உரிய விடயத்திற்குப் பொறுப்பான உத்தியோகத்தரின் சேவை பகுப்பாய்வு பத்திரத்தில் உள்ளடக்கி தவறுகள் ஏற்படாதவாறு மேற்பார்வை செய்வதற்குப் நடவடிக்கை எடுப்பேன். | உத்தரவுப் பத்திரத்தை செல்லுபடியாக்குதல் அல்லது நிறுத்தி வைத்தல் அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும். |
| (ஆ) | (i) 2016 இன் 12 ஆம் இலக்க தகவல்களைக் தெரிந்து கொள்ளும் உரிமை தொடர்பான அதிகாரச் சட்டம் | அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் தகவல் உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டு அது பற்றி வெளியிடப்பட்டிருக்கவில் லை. | சபையின் தகவல் உத்தியோகத்தராக செயலாளர் நடவடிக்கை எடுத்துவருடதுடன் அது சட்டத்துக்கு முரணாக இருந்தால் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என தயவாக தெரிவிக்கிள்றேன். | தகவல் உத்தியோகத்தர் ஒருவரை நியமித்து அது பற்றி வெளியிடுதல் வேண்டும். |
| | (ii) 2016 இன் 12 ஆம் இலக்க தகவல்களைத் தெரிந்து கொள்ளும் | இப் பணிப்புரையின் பிரகாரம் தகவல் வேண்டுதல் ஒன்றினை நிறைவேற்றவதற்கு தீர்மானித்த உடன் அது பற்றி வேலை செய்கின்ற | சபையிடம் தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்காக வேண்டுதல் கிடைக்காமையில் இது பொறுப்பேற்றப்பக்கப்பட்டது என விண்ணப்பித்தவருக்குத் | வேண்டிக் கொள்ளப்படுகின்ற தகவல்கள் அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் 14 நாட்களுக்குள் விண்ணப்பதாரர்களுக் |

| | | | |
|---|---|---|---|
| உரிமை தொடர்பான அதிகாரச் சட்டத்தின் 41 ஆம் பிரிவின் கீழ் தயாரிக்கப்பட்ட பணிப்புரைத் தொகுப்பின் 07 ஆம் இலக்க பணிப்புரை | 14 நாட்களுக்குள் உரிய படிவத்தின் பிரகாரம் தகவல் உத்தியோகத்தரினால் விண்ணப்பதாரருக்கு எழுத்து மூலம் தெரியப்படுத்தி அனுப்பி வைக்கப்பட வேண்டிய பேரிலும் அது சந்தர்ப்பங்களின் போது விடுக்கப்பட்ட வேண்டுதல தொடர்பாக அவ்வாறு தெரிவித்து அனுப்புவதறகாக 14 நாட்களுக்கும் 181 நாட்களுக்கும் இடைப்பட்ட காலம் எடுத்திருந்தது. | செயலாளாரால் தயாரிக்கப்படுகின்ற பதிலை விண்ணப்பிப்பதற்கு அங்கீகாரத்தினைப் பெற்று பதிலை அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் ஏதாவது தாமதம் அந் நடைமுறையில் இடம் பெறுவதாக சபைக்கும் விளங்கியுள்ளதனால் இத் தாமத்தினைப் தவரித்ததுக் கொள்வதற்கு ஏனைய நடைமுறைகளைப் பின்பற்றுதல் தொடர்பாக தற்பொழுது கவனம் செலுத்தப்படவுள்ளது. | கு வழங்குவதற்காக அதிகாரம் அளிக்கப்பட்டுள்ள ஒரு உத்தியோகத்தரை நியமித்து அந்த உத்தியோகத்தரின் பெயர் தொலைப்பேசி இலக்கம் என்பன பகிரங்கப்படுத்தல் வேண்டும். |
| (இ) 2018 மார்ச் 26 ஆந் திகதிய 221 ஆவது சபைச் கூட்டத் தீர்மானம் | சபையில் பதிவு செய்யப்படாது நில அளவை நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற தகைமை பெற்ற நபர்கள் சம்பந்தமாக தேடிப்பார்ப்பதற்கு பொலிஸ் மா அதிபருக்கு தெரியப்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தும் அவ்வாறு பொலிஸ் மா அதிபருக்கு தெரியப்படுத்தியிருக்கவில் லை. | இது 2018 இல் இடம் பெற்றதாகும் பதவியணியிலுள்ள உத்தியோகத்தர்கள் அடிக்கடி மாறுவதுடன் அரைவாசிப் பேர் ஒப்பந்த மற்றும் தற்காலிக அடிப்படையில் வேலை செய்வதனால் சபையின் நடவடிக்கைகளையையும் தொடர்பாகப் பேணுதல் சிக்கலானதாக உள்ளது. பத்திரிகைளின் மூலம் பொது மக்களுக்குத் தெரியப்படுத்தியதனால் பொலிஸ் மா அதிபருக்கும் தெரியப்படுத்தியுள்ளது. எனக் கருதுகின்றேன் பொலிஸ் மா அதிபருக்கு தெரியப்படுத்தப்பட வில்லை. என்பது வெளிப்படுத்தப்படுமாயிருந் தால் சபையின் குழுத் தீமானம் எடுத்து நாளது வரையாக்கப்படும் எனத் தயவாகத் தெரிவிக்கின்றேன். | நில அளவை நடவடிக்கைகளை மேற்கொள்கின்ற தகமை பெறாத மற்றும் பதிவு செயல்படாத நபர்களை அதிலிருந்து தடுப்பதற்காக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.7 வரி ஒழுங்கு விதிகளுக்கு இணங்கியிருக்கவில்லை.**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| (அ) 2017 இன் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி (திருத்திய) அதிகாரச் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் மூன்றாம் பட்டோலையில் குறிப்பிடப்பட்டவாறு நில அளவைச் சபை வரி செலுத்துவதிலிருந்து விடுவிக்கப்பட்ட ஒரு நிறுவமாக குறிப்பிடப்பட்டிருக்காததுடன் அவ்வாறு விடுவிப்பதற்குரிய ஆவணங்களும் இல்லாதிருந்த போதிலும் சபையினால் வருமான வரி செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கவில்லை. என்பது கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | சபை 2002 இன் 17 ஆம் இலக்க நில அளவை அதகாரச் சட்டத்தின் விளக்கமளிக்காதவாறு நில அளவைத் தொழில் காணிகளை அறவீடு செய்வது தொடர்பாக நியமங்கள் மற்றும் நடைமுறைகைளை பேணுதல் மற்றும் நில அளவை செய்தல் நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற நபர்களுக்கிடையே தொழில்ரீதியான ஒழுக்கங்களைப் பேணுவதற்காக தோற்றுவிக்கப்பட்டுள்ள இலாபம் உழைக்கும் -- நிறுவனமாகும். ஆரம்பத்தில் மாத்திரம் அரசாங்கத்தின் நிதி பெற்றுக்கொள்ளப்பட்ட போதிலும் தற்பொழுது சபையின் நடவடிக்கைகள் நில அளவையாளர்களிடமிருந்து சேகரிக்கப்பட்ட நிதிகளிலிருந்து மேற்கொள்ளகின்ற ஒரு அரசாங்க நிறுவனமாகும். எனவே சபை ஸ்தாபிக்கப்பட்ட திகதியிலிருந்து இன்று வரை வருமானவரி செலுத்தல் இடம் பெறவில்லை. | வரி செலுத்துவதிலிருந்து விடுவிக்கப்படுவதாயிருந்தால் அதற்கான அங்கீகாரத்தை சமர்ப்பித்தல் வேண்டும். |
| **(ஆ) 2006 இன் 06 ஆம் இலக்க முத்திரை வரி திருத்திய அதிகாரச் சட்டத்தின் (7) ஆம் பிரிவு** | | |
| (1) 2019 திசெம்பர் 31, 2020 யூன் 30, 2020 செப்தெம்பர் 30 மற்றும் 2020 திசெம்பர் 31 இறுதிக் காலாண்டுகளில் இணக்கப்பாட்டிற்கு வந்த முத்திரை கட்டண கூற்றுக்கள் காலாண்டு முடிவடைந்து அடுத்து வரும் மாதத்தின் 15 ஆம் திகதியின் போது உள்நாட்டு இறைவரித் | எதிர்காலத்தில் தகவல்களைப் பரீட்சித்து பதில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பேன். | நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதிக்குள் அறவிடப்பட்ட வரி உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பி வைத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | திணைக்களத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இறுதிக் கூற்று 2020 பெப்ரவரி 03 ஆந் திகதி தாமதித்து சமர்பிக்கப்பட்டிருந்ததுடன் 2020 யூன் 30, இல் 2020 செப்தெம்பர் 30, இல் மற்றும் 2020 திசெம்பர் 31, இல் முடிவடைந்த காலாண்டுகளுக்கான கூற்றுக்கள் 2021 ஏப்ரல் மாதம் வரை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (2) | அனைத்து காலாண்டுகளுக்கான முத்திரை வரி உரிய காலாண்டு முடிவடைந்த திகதிகதியிலிருந்து 15 நாட்களுக்குள் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட வேண்டிய போதிலும் 2019 ஆம் ஆண்டிற்கான இறுதிக் காலாண்டு மற்றும் மீளாய்வாண்டின் அனைத்து காலாண்டுக்குமான முத்திரை வரி தாமதாமாக அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக் கூற்றுக்களில் செலுத்த வேண்டிய முத்திரை வரியாக ரூபா 21,075 காட்டப்பட்டிருந்த போதிலும் 2021 பெப்ரவரி 19 ஆந் திகதி ரூபா 2,475 மாத்திரம் அனுப்பி வைக்கப்பட்டிருந்ததுடன் 2020 திசெம்பர் மாதம் வரையான முத்திரை பொறுப்பாகிய செலுத்தப்படாது மிகுதியாக முத்திரை வரித்தொகை ரூபா 18,600 பணம் 2021 சனவரி 15 ஆந் திகதி அல்லது அத் திகதிக்கு முன்னர் செலுத்த வேண்டிய போதிலும் அவ்வாறு செலுத்தப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் தகவல்களைப் பரீட்சித்து பதில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பேன். | அதிகாரச் சட்த்தின் பிரகாரம் நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்குள் கொடுப்பனவு செய்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 3,868,355 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 1,188,879 ஆகும். அதற்கிணங்க நிதி விளைவுகளில் ரூபா 2,679,476 முன்னேற்றம் அவதானிக்கப்பட்டது. இந்த முன்னேற்றத்திற்கு உத்தரவுப் பத்திரக் கட்டணம், பதிவு செய்தல் கட்டணம், நிலையான வைப்பு வட்டி வருமானம், ஏனைய வருமானங்கள் முதலியன ரூபா 3,529,882 ஆல் அதிகரித்தல் பிரதான காரணமாக இருந்தது.

### 2.2 பிரதான வருமானங்கள் மற்றும் செலவு விடயங்களின் போக்கு பகுப்பாய்வு

புதிய ஒரு நிலையான வைப்பினை ஆரம்பித்தல் மற்றும் முன்னைய ஆண்டுகளில் நிலையான வைப்புக்களின் தொடக்க முதலீட்டுப் பெறுமதிகள் அதிகரித்தலின் காரணமாக நிலையான வைப்புக்களின் வட்டி வருமானம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் போது 93 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. உத்தரவுப் பத்திர தேறிய வருமானம் முற்பண வருமானங்கள் ஆகிய புதிய வருமான வழிகளின் காரணமாக ஏனைய வருமானங்கள் முன்னைய ஆண்டினை விட மீளாய்வாண்டின் போது 632 சதவீதத்தால் முன்னேற்றமடைந்திருந்ததுடன் செயலமர்வு வருமானம் முன்னைய ஆண்டினைவிட குறைவடைந்ததன் காரணமாக செயலமர்வு தேறிய வருமானம் 55 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்திருந்தது.

### 2.3 விகிதாசார பகுப்பாய்வு

சமர்ப்பிக்கப்பட்ட நிதி நிலைமைக் கூற்றின் பிரகாரம் நிறுவனத்தின் நடைமுறை விகிதம் 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளின் போது முறையே 1:0.5 மற்றும் 1:0.4 ஆகும். அதற்கிணங்க முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் போது நடைமுறை விகிதம் கீழ் மட்டத்தினை எடுத்திருப்பதற்குத் காரணமாக இருந்தது. நில அளவையாளர் தினத்திற்காக சேகரிக்கப்பட்டமை மற்றும் புதிய பொறுப்பு மீளாய்வாண்டில் காணப்பட்டமையாகும்.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவத்தின் செயற்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
| --- | --- | --- |
| 2012 யூலை 05 ஆந் திகதிய பொது முயற்சிகள் தொடர்பான பாராளுமன்ற தெரிவுக்குழு கூட்டத்தின் பணிப்புரையின் பிரகாரம் சபைக்கு ஒரு செயலாளர் நியமிக்கப்பட வேண்டிய போதிலும் வெற்றிடமாகக் காணப்பட்ட செயலாளர் பதவியினை நிரப்புவதற்கு 2021 ஏப்ரல் மாதம் வரை சபைக்கு முடியாதிருந்தது. | நாடாளாவிய சேவையின் முதலாவது வகுப்பிலுள்ள ஒரு பதவியாக இருக்க வேண்டுமெனக் கருதி 277 ஆம் இலக்க குழுக் கூட்டத்தின் போது சபை ஏற்றுக்கொண்டிருந்த போதிலும் அதற்காக அங்கீகரித்த MM-1-1 சம்பள அளவுத் திட்டத்தினை பழைய சம்பள அளவுத் திட்டமான HM1-1 ஆக பரிமாற்றம் செய்து | வெற்றிடமாகக் காணப்பட்ட செயலாளர் பதவியினை நிரப்பவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | கொள்வதற்கும் இலங்கை நில அளவையாளர் சேவையின் முதலாவது வகுப்பிலுள்ள ஒரு உத்தியோகத்தரினை நடாளவிய அடிப்படையில் இணைத்துக் கொள்வதற்காக ஆட்சேர்ப்பு நடைமுறையினைத் திருத்துவதற்குத் தேவையான அங்கீகாரத்திற்கான வேண்டுதலின் 2021 மார்ச் 15 ஆந் திகதிய கடிதத்திற்குப் பதிலாக தற்போதுள்ள ஆட்சேர்ப்பு நடைமுறையின் பிரகாரம் சேர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு 2021 ஏப்ரல் 08 ஆந் திகதிய காணி அமைச்சின் செயலாளரால் தெரிவிக்கப்பட்டது. அதற்கிணங்க சேர்த்தக் கொள்வதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பேன். | |

### 3.2 செயற்பாட்டுச் செயற்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| நில அளவையாளர்களின் தொழில் முரண்பாடுகள் தொடர்பாக பொது மக்களிடமிருந்து 2020 ஆம் ஆண்டில் கிடைத்த மொத்த முறைப்பாடுகளின் எண்ணிக்கை 113 ஆக இருந்த போதிலும் ஆண்டின் போது தீர்த்து வைக்கப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை 33 மாத்திரமாக இருந்தது. வருடாந்தம் தீர்த்து வைப்பதற்கு காணப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை படிப்படியாக அதிகரித்துக் காணப்பட்டிருந்தும் அந்த முறைப்பாடுகளைத் தீர்த்து வைக்கும் செயற்திறனை அதிகரிப்பதற்காக விசேட வேலைத் திட்டம் அமுல்ப்படுத்தப்பட்டடிருக்கவில்லை. | 2017, 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகள் அளவில் முறைப்பாடுகளைத் தீர்த்து வைப்பதில் படிப்படியான குறைவு அவதானிக்கப்பட்ட போதிலும் அந்த நடவடிக்கையை நிர்ணயிக்கப்பட்டவாறு மேற்கொள்ளப்பட்டுள்ளது. முறைப்பாடுகள் அல்லது எதிர் தரப்பினர்களின் பங்குபற்றுதலில் தாமதத்தின் காரணமாக அவற்றினை முடிவுறுத்துவதற்கு அதிக காலம் எடுத்தது. எதிர் காலத்தில் முறைப்பாடுகளைத் தீர்த்து வைக்கும் செயல் முன்னேற்றத்தினை அதிகரிப்பதற்குத் தேவயான ஆக்கபூர்வமான முயற்சிகளை எடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். | முறைப்பாடுகளைத் தீர்த்து வைக்கும் செயற்திறனை மேம்படுத்துதல் வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாட்சியும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| பாதீட்டில் காணப்பட்ட பாதீடு செய்யப்பட்ட வருமானங்களிற்கும் உள்ளபடியான வருமானத்திற்குமிடையே 2020 ஆம் ஆண்டிற்காக பதிவு செய்தல் கட்டணங்களில் ரூபா 508,000 அல்லது 1210 சதவீதமும் ஏனைய வருமானங்களில் ரூபா 1,558,385 அல்லது 204 சதவீத முரண்களும் அவதானிக்கப்பட்டன. இதற்கிணங்க பாதீட்டினை செயற்திறனான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தியிருக்கவில்லை. என்பது அவதானிக்கப்பட்டது. | அரசாங்க நில அளவையாளர்களுக்கு வருடாந்தம் உத்தரவுப் பத்தரம் வழங்குவது தொடர்பான ஒரு வழக்கு மேன் முறையீட்டு நீதி மன்றத்தில் விசாரணை செய்யப்பட்டுக் காணப்படுவதுடன் பாதீட்டினைத் தயாரித்ததன் பின்னர் அதற்காக நிதீமன்ற தீர்ப்பு கிடைத்துள்ளதனால் அதற்கிணங்க வருடாந்த நில அளவை உத்தரவுப் பத்தரத்திற்கான வேண்டுதல்கள் சிபார்சு செய்யப்பட்டு நில அளவைச் சபைக்குச் சமர்ப்பிப்பதற்கு நில அளவையானர் நாயகத்தினால் தீர்மானம் எடுக்கப்பட்டிருந்தனால் சபையில் பதிவு செய்தலும் அதிகரிக்கும். 2020 பாதீட்டில் காணப்படுகின்ற வருமானமும் உள்ளபடியான வருமானமும் மாற்றமடைவதற்கு இது பாதகமான தாக்கமளித்துள்ளதுடன் எல்லையினை மிகைத்து வருமான முரண்களும் ஏற்பாடும் அதற்கிணங்க இந்த ஆண்டில் பாதீட்டினை முகாமைத்துவ கருவியாக பயன்படுத்த முடியாதுள்ளது. | பாதீட்டினை செயற்திறனான முகாமைத்துவ கருவியாக பயன்படுத்தல் வேண்டும். |